# ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

**NEET , JEE AND X, XI,XII- BOARD EXAM பயிற்சி மையம்,**
**SBM பள்ளி வளாகம், திருச்சி மெயின் ரோடு, நாமக்கல்.**
**அலைபேசி: 99655 31727, 94432 31727.**

## மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச்- 2020

## TENTATIVE ANSWER KEY (04.03.2020)

## வகுப்பு – 11 - பொதுத்தமிழ்

**கால அளவு :3.00 மணி நேரம்** **மதிப்பெண்கள் :90**

| வ. எண் | விடை | MARK | TOT. MARK |
|---|---|---|---|
| | **பகுதி - I** | | |
| | **குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | | |
| 1 | இ) உள்ளான் பறவை | 1 | |
| 2 | ஈ) சாழல் (iv) விளையாட்டு | 1 | |
| 3 | ஆ) ஆலப்புழை | 1 | |
| 4 | அ) மகாகவி பாரதியார் | 1 | |
| 5* | இ) ஓலை<br>**குறிப்பு:** கற்றலுக்கு உதவும் ஏட்டுக் கற்றைகளை ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல், நூல் எனப் பலபெயரிட்டு அழைத்தனர். முன் மூன்றும் ஓலைக்கற்றையையும், பின்னிரண்டும் உட்பொருளையும் சிறப்பாகக் குறித்தன. **(புத்தகம் பக்க எண். 93)(புத்தக விடை)** | 1 | **14x1=14** |
| 6 | இ) பியால | 1 | |
| 7 | அ) வியங்கோள் வினைமுற்று | 1 | |
| 8 | அ) மா முன் நேர் | 1 | |
| 9 | இ) கடல் + அலை – உயிர் + மெய் | 1 | |
| 10 | அ) மாலுமி | 1 | |
| 11 | ஆ) நர்த்தகி நடராஜ் | 1 | |
| 12 | இ) மதிப்புக் கல்வி | 1 | |
| 13 | ஈ) தனிக்குறில் முன் ஒற்று, உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே. | 1 | |
| 14 | ஆ) காய்ச்சல் | 1 | |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| பகுதி - II | | | |
|---|---|---|---|
| | பிரிவு - 1<br>**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | **3x2=6** |
| 15 | **தமிழர்கள் புகழ் பழி ஆகியவற்றைப் புறநானூறு கூறுவன:**<br>❖ தமிழர், புகழ் கிட்டுமாயின் தம் உயிரினையும் கொடுப்பர்.<br>❖ பழி கிட்டுவதானால் அதனால் உலகம் முழுவதும் பெறுவதாய் இருந்தாலும் கொள்ளாதவர் என்று புறநானூறு கூறுகிறது. | 1<br><br>1 | **2** |
| 16 | **பொன்னகரம்:**<br>❖ கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடுபோல நெருங்கியிருந்தன.<br>❖ மலைபோன்ற யானைகள் அவ்விடத்தில் நிறைந்திருந்தன.<br>❖ வழிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன.<br>❖ இவற்றால் முழுமை பெற்ற பூமியைப்போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது. | ½<br><br>½<br>½<br><br>½ | **2** |
| 17 | **ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி குறிப்பிடுவது:**<br>❖ இவ்வடி **நாங்கூழ்ப்புழுவைக்** குறிக்கிறது.<br>❖ அது சத்தற்ற நிலத்து மண்ணையும் நன்றாய்க் கிளறி, உண்டு, மெழுகைக்காட்டிலும் இளகிய பதமாய் மாற்றி உழவருக்கு உதவுகிறது.<br>❖ அது செய்யும் இவ்வுதவியினை எண்ணிப் பாராமல் எண்ணற்ற புழுக்களும் பூச்சிகளும் அதற்கே இடையூறு விளைவிக்கின்றன.<br>❖ அதைப் பொறுத்துக் கொண்டு அது வாழ்கிறது. | 1<br><br>½<br><br>½ | **2** |
| 18 | **உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தவை**<br>❖ உழைப்பாளர்களின் தோள் வலிமையால் அழகான நகரங்கள் உண்டாயின; சிற்றூர்கள் உருவாக்கப்பட்டன.<br>❖ நேர்த்தியான வரப்புகள் கொண்ட வயல்கள் உருவாகின; ஆற்றுநீரைக் கொண்டுவரும் நல்ல வாய்க்கால்கள் வெட்டப்பட்டன.<br>❖ நெல் நன்றாக விளையும்படியாக மீண்டும் மீண்டும் உழுது நிறைவான பயன்கள் உருவாகின. இவையனைத்தும் உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தனவாகும். | ½<br><br>½<br><br>1 | **2** |
| | பிரிவு - 2<br>**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x2=4** |
| 19 | **'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமை - ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பீடு:**<br>❖ வாண வேடிக்கை விடுபவன் நாழிக்குள் மிகக்குறைந்த அளவே மருந்தைச் செலுத்திக் கெட்டித்து வெடிக்க வைப்பான். ஆனால், அளவில் சிறிதாகிய அம்மருந்து | 1 | |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | வெடிக்கும்போது வர்ண ஜாலங்களுடன் தோன்றும் காட்சி கண்ணைக் கவரும்.<br>❖ ப. ஜீவானந்தம் மேடையில் பேசும்போது சிறிதளவு கருத்துகளையே எடுத்துக்கொள்வார். ஆனால், அவர் மேடையேறிப் பேசும்போது, வாணவேடிக்கை நிகழ்வதைப் போல வர்ணஜாலங்களும் வண்ணங்களும் குடையும் மாலையுமாக இறங்கி வரும்.<br>❖ அவ்வாறு எளிமையும் பேரழகும் கொண்ட பேச்சுக்குச் சொந்தக்காரர் ஜீவானந்தம் என்பது கருத்தாகும். | 1 | **2** |
| 20 | **ஃபிரெஸ்கோ ஓவியம் என்ற சொல்லின் பொருள்:**<br>❖ ஃபிரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள். ஃபிரெஸ்கோ ஓவியங்கள் சுண்ணாம்புக் காரைப்பூச்சுமீது அதன் ஈரம் காயும் முன் நுட்பமாய் வரையப்படும் பழமையான ஓவியங்கள்.<br>**ஓவியங்கள் காணப்படும் இடங்கள்:**<br>❖ அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் இவ்வகையைச் சார்ந்தவை ஆகும். | 1<br>1 | **2** |
| 21 | **தொழு உரம்:**<br>**நன்செய்:**<br>❖ மாட்டுச் சாணம் , கோமியம் ஆகியவற்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்க வேண்டும். இது நன்செய் நிலத்திற்கு இட வேண்டும்.<br>**புன்செய்:**<br>❖ காய்ந்த இலைச் சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து போட்டால் போதும். | 1<br>1 | **2** |
| | **பிரிவு - 3**<br>**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | | **7x2=14** |
| 22 | **உயிரீறு:**<br>நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது "உயிரீறு" எனப்படும்.<br>**எ.கா.** மணி[ண் + இ]மாலை =மணிமாலை – உயிரீறு<br>**மெய்யீறு:**<br>நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்<br>**எ கா:** பொன் + வண்டு = பொன்வண்டு – மெய்யீறு. | 1<br>1 | **2** |
| 23 | **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**<br>**அ) தண்டுடை = தண்டு + உடை**<br>விதி 1 : உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோம்.<br>விதி 2 : உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.<br>**ஆ) புவியாட்சி = புவி+ ஆட்சி**<br>விதி 1: இ ஈ ஐ வழி யவ்வும்<br>விதி 2: உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே. | 1<br>1<br>1<br>1 | **2** |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| 24 | **உள்ளுறை உவமம்:**<br>❖ கவிஞர் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப்படுத்துவதை உள்ளுறை உவமம்(உவமை) என்பர்.<br>**இறைச்சி:**<br>❖ உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப்பொருளே இறைச்சி ஆகும். இறைச்சி அகப்பாடல்களில் மட்டுமே வரும். | 1<br>1 | **2** |
| 25 | **மெய்ப்புத்திருத்தக் குறியீடு:**<br>**# -** பத்திகளுக்கிடையில் வரிகளுக்கிடையில் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக.<br>**^ -** சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக்கொள்க. | 1<br>1 | **2** |
| 26 | **ஏதேனும் ஒன்றனுக்குப் உறுப்பிலக்கணம் தருக.**<br>**அ) மலிந்து = மலி + த்(ந்) + த் + உ**<br>மலி - பகுதி<br>த்(ந்) - த் சந்தி; ந் ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி<br>**ஆ) அணிந்தேன் = அணி +த்(ந்) +த் + ஏன்**<br>அணி - பகுதி<br>த்(ந்) - த் சந்தி; ந் ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | 1<br>1<br>1<br>1 | **2** |
| 27 | **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :**<br>**வைகை -** சைவருக்கும் சமணருக்குமிடையே வைகை நதியில் புனல் வாதம் நிகழ்ந்தது.<br>**வை கை –** 'வை கை' என்றவுடன் ஒருவர் கைமீது ஒருவர் கை வைத்து, ஒற்றுமையுடன் இனி வாழ்வதாய் உறுதி பூண்டனர்.<br>**(பொருத்தமான விடையிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1 | **2** |
| 28 | **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**<br>**பொரி, பொறி -** பொரி பொரிக்கும்போது தீப்பொறி பட்டுக் காயம் ஏற்பட்டது.<br>**(பொருத்தமான விடையிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | **2** |
| 29 | **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குப்படுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**<br>1. தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.<br>2. நிலவு மனதை மகிழ்விக்கும் | 1<br>1 | **2** |
| 30 | **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**<br>அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப்பணியைப் பெறவேண்டும். | 2 | **2** |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | பகுதி - III | | |
|---|---|---|---|
| | பிரிவு - 1<br>**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 31 | **"சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம்:**<br>**இடம் :**<br>இத்தொடர், பெரியவன் கவிராயர் இயற்றிய "திருமலை முருகன் பள்ளு" என்னும் நூலில் வடகரை நாட்டுப்பள்ளி கூறுவதாய் அமைந்துள்ளது. அப்பள்ளி தன் நாட்டுவளம் பற்றிக் கூறுகையில் "சலச வாவியில் செங்கயல் பாயும்" என்று கூறினாள்.<br>**பொருள் :**<br>வடகரைநாட்டில் தாமரைத் தடாகத்தில் உள்ள செந்நிறக் கயல்மீன்கள் அங்குமிங்கும் துள்ளிப்பாயும்.<br>**விளக்கம்:**<br>வடகரை நாட்டில் தாமரைத் தடாகத்தில் மிகுந்த நீர் நிரம்பி இருப்பதால் அங்கே எண்ணற்ற தாமரைப்பூக்கள் பூத்துள்ளன. மேலும், நீர்வாழ் உயிரினமான செந்நிறங்கொண்ட கயல்மீன்கள் மகிழ்ச்சியுடன் அங்கும் இங்கும் துள்ளிப்பாய்ந்து கண்ணுக்கு விருந்து படைக்கின்றன என்கிறாள், மூத்தபள்ளி. | 1<br>1<br>2 | **4** |
| 32 | **மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன :**<br>**மருந்து பற்றித் திருக்குறள் கூறுவது :**<br>ஒருவன் தான் முன்பு உண்ட உணவு செரித்ததை அதற்கு உரிய அடையாளங்களால் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பின் உண்டானாயின் அவன் உடலுக்கு மருந்து என வேறு வேண்டுவது இல்லை. அவன் நோய் இல்லாமல் வாழ்வான்.<br>**மருத்துவர் பற்றித் திருக்குறள் கூறுவது :**<br>மருத்துவன் நோயாளியிடம் தோன்றியிருக்கின்ற நோய் இன்னது என்பதை குறிகளால் ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். பின்பு, அந்நோய் தோன்றுதற்குரிய காரணத்தை ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அதன்பின், அந்நோயைத் தீர்க்கும் வழிமுறைகளை ஆராய்ந்து முடிவு செய்து, அம்முறைகள் தப்பாமல் பயன்கொடுக்கும் வகையில் மருத்துவம் செய்தல் வேண்டும்.<br>**மருத்துவம் பற்றித் திருக்குறள் கூறுவது :**<br>நோயாளியின் வயதையும் நோயின் அளவையும் மருத்துவத்தின் காலத்தையும் ஆராய்ந்து மருத்துவர் செயல்பட வேண்டும். | 1<br>2<br>1 | **4** |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| 33 | **சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்கள்:**<br>❖ இமயவரம்பம் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவன். தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான்.<br>❖ சேரலாதனின் குடிமக்கள் பசி, பிணி அறியாதவர்கள். எனவே, நாட்டை விட்டு வெளியேற வேண்டிய தேவைகள் அற்றவர்கள். உள்நாட்டிலேயே சுற்றத்தாரோடு வாழ்பவர்கள்.<br>❖ சேரலாதன், சான்றோர்களுக்கு அரிய பொருள்களைக் கொடையாக வழங்கும் இயல்புடையவன். அவனுடைய நாட்டில் எப்போதும் விழாக்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.<br>❖ சேரலாதன் புதுவருவாய்ப் பெருக்கமும், ஈகையால் இன்பமும் உடைய காரணத்தினால் சேரநாடு செல்வ வளம் மிக்கது என்பதை உறுதிப்படுத்துகின்றன. | 1<br>1<br>1<br>1 | **4** |
| 34 | **இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர்துளியாய்" எனக் கூறுவதன் நயம்:**<br>❖ ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன் என்று கூறுகின்ற இன்குலாப் பறவைகளோடு நாடுகளின் எல்லை கடப்பேன் என்றும்,<br>❖ பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் தனக்குத் தெரிந்த சொல்லால் அழைப்பேன் என்றும்,<br>❖ உதவும் கரங்களில் தோழமை தொடரும் எனவும், உதவ முடியாத மனிதர்களிடமும் நேசத்துடன் நெஞ்சம் படரும் என்று இன்குலாப் கூறுகிறார்.<br>❖ பல கோடி நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து உருவானதுதான், கடல்.<br>❖ அவ்வாறு கடலாய் உருவெடுத்தபின், அக்கடலில், 'முதலில் நீர்த்துளியாய் இருந்தது அதுதான், இதுதான்' எனப் பிரித்தறிய இயலாது.<br>❖ அதுபோல, பல கோடி மனிதர்களின் தொகுப்புதான் வலிமையான உலகம்; அதில், 'நான்' என மனிதன் ஒருவன் நினைத்தால் உலகம் என்னும் 'ஒற்றுமை' சிதறிவிடும்.<br>❖ அஃதாவது, உலக மக்கள் யாவரும் ஒரே குடும்பத்தினர் எனக் கருத வேண்டும்<br>❖ உலகத்தைக் கடலாகவும் அத்தகு கடலில் இருக்கின்ற துளியாக தன்னையும் இணைத்துக் கொள்கின்ற இன்குலாபின் நயம் பாராட்டத்தக்கது. | ½<br>½<br>½<br>½<br>½<br>½<br>½<br>½ | **4** |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு - 2<br>**குறிப்பு :எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 35 | **வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?:**<br>**இயற்கையில் கிட்டும் பொருள்கள் :**<br>❖ வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்க வேண்டியவை வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகும்.<br>❖ இவை நம்மைச் சூழ வளரும், எளிதில் கிட்டும் இயற்கைப் பொருள்கள். இவற்றை நாமும் வளர்க்கலாம். | 2 | 4 |
| | **திட்டமிட்டும் செயல்பட வேண்டும் :**<br>❖ மேற்கண்ட பொருள்களைக் கோமியத்தில் ஊறவைப்பர்.<br>❖ வேளாண்மை சார்ந்த துணைத்தொழில், மாடு வளர்த்தல், தனியார் பலரும் பன்னோக்கில் மாடுகளை வளர்க்கின்றனர்.<br>❖ திட்டமிட்டுச் செயல்பட்டால் ஒரு சொட்டுக் கோமியத்தைக்கூட வீணாகாமல் பயன்படுத்தலாம்.<br>❖ எனவே, வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி தயாரிப்பது நடைமுறைக்குச் சாத்தியமானதே. | 2 | |
| 36 | **மரபுவழிக் கல்வி முறைகளில் எவையேனும் இரண்டு:**<br>**மரபுவழிக் கல்வி முறைகள்:**<br>❖ குருகுலக் கல்வி முறை<br>❖ திண்ணைப் பள்ளிக் கல்வி முறை<br>❖ உயர்நிலைக் கல்வி முறை<br>**குருகுலக் கல்வி முறை:**<br>❖ இம்முறையில் மாணவர்கள் ஆசிரியர்களை அணுகி அவருடன் பல ஆண்டுகள் தங்கி, அவர்களுக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றனர்.<br>❖ செய்துகற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் இக்குருகுலக் கல்வி முறை அமைந்திருந்தது.<br>❖ இம்முறை, போதனா முறையைத் தாண்டி வாழ்வியலைக் கட்டமைப்பதில் சிறப்பானதாக விளங்கியது. | 2 | 4 |
| | **திண்ணைப்பள்ளிக் கல்வி முறை:**<br>❖ 19ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் ஊர்கள்தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் இருந்தன.<br>❖ அவற்றினைத் தெற்றிப்பள்ளிகள் என்றும் அழைத்தனர்.<br>❖ திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் கணக்காயர்கள் என்றே அழைக்கப்பட்டனர்.<br>❖ அக்காலக் கல்வி முறை, திண்ணைப் பள்ளி முறை என்றே தமிழகத்தில் அழைக்கப்பட்டது.<br>❖ இப்பள்ளிகள் ஒரே மாதிரியான வரன்முறையுடன் செயல்படவில்லை.<br>❖ எனவே, ஆங்கிலேயர், திண்ணைப்பள்ளிகள், பாடசாலைகள், மக்தாபுகள், மதரஸாக்கள் போன்ற | 2 | |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | கல்வி அமைப்புகளை நாட்டுக் கல்வி என்று அழைத்தனர். | | |
| | ❖ இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளிநேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தன. | | |
| | ❖ ஆயினும் பொதுமக்களுடைய கல்வித்தேவையை இப்பள்ளிகள் ஓரளவேனும் நிறைவு செய்தன. | | |
| | ❖ சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப்பள்ளிகள் இயங்கி வந்தன என்றும் அவற்றின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளின் அப்போதைய கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே காணப்பட்டது என்றும் தாமஸ்மன்றோ காலத்தில் நடத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| | **(ஏதேனும் இரண்டு கல்வி முறைகளுக்கு விளக்கம் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| 37 | **ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகளில் இடம் பெற்ற செய்திகள்:** | | |
| | ❖ அவருடைய இறுதிக்கால நாட்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் மிக விரிவாகப் பேசியுள்ளன. | ½ | |
| | ❖ 1760 பிப்ரவரியில் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்துகொண்டிருந்ததாகவும் செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று ஆங்கிலத் தளபதி, புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் தகவல் வந்துள்ளது. | ½ | |
| | ❖ ஆங்கிலேயப் படைகள் சாரம் வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். | ½ | |
| | ❖ குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது. | | |
| | ❖ தேவனாம்பட்டணத்தில் மேலும் மேலும் துருப்புகளை ஆங்கிலேயக் கப்பல்கள் இறக்கின. | ½ | **4** |
| | ❖ புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். | ½ | |
| | ❖ புதுச்சேரியின் இவ்வாறான சூழ்நிலையில் ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு இருந்த ஆனந்தரங்கரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. | | |
| | ❖ 12.01.1761 திங்கள் கிழமை ஐந்து நாழிகைக்குப் பட்டணத்தின் மீது பீரங்கிக் குண்டுகள் விழுந்து கொண்டிருந்த வேளையில் ஆனந்தரங்கர் மறைந்தார். | ½ | |
| | ❖ 1736 ஆண்டு செப்டம்பர் ஆறாம் நாள் தொடங்கி ஏறத்தாழ 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவு செய்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 1761 ஆண்டு ஜனவரி 11 ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது. | ½ | |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | ❖ புதுச்சேரியின் முற்றுகை பற்றிய முடிவினைக் கூறாமலேயே நாட்குறிப்பும் முடிந்துள்ளது.<br>❖ ஆனந்தரங்கர் நாட்குறிப்பு 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது வெளிப்படுத்தும் விரிவான செய்திகள் வரலாற்றறிஞர் தம் குறிப்புரைகளின் துணையோடு கண்டறிய முடியும். | ½ | |
| 38 | **கற்றளிக் கோவில்கள்:**<br>❖ **கல் + தளி = கற்றளி**<br>❖ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதைப் போல, கருங்கற்களை அடுக்கிக் கட்டும் கோவில் கற்றளிக் கோவில் எனப்படும்.<br>❖ இஃது ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவமாகும்.<br>**சான்று:**<br>❖ மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியன கற்றளிக் கோவில்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.<br>❖ முழுமையாகக் கற்களைக்கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கற்றளிக்கோவில் தஞ்சைப் பெரியகோவிலே ஆகும். | 2<br><br>2 | **4** |
| | **பிரிவு - 3**<br>**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்** | | **3x4=12** |
| 39 | **வேற்றுமை அணி**<br>**அணி இலக்கணம்:**<br>முதலில் இரு பொருள்களுக்கு ஒப்புமை கூறி, பின்னர் அவற்றை வேறுபடுத்தி ஒன்றைவிட ஒன்று வேறுபட்டது எனக் கூறுதல் வேற்றுமையணி ஆகும்.<br>**சான்று**<br>**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**<br>**நாவினாற் சுட்ட வடு**<br>**சான்று விளக்கம்:**<br>நெருப்பால் சுட்ட புண் விரைந்து ஆறும். நாவினால் சுட்ட வடு ஆறாது.<br>**அணிப்பொருத்தம்:**<br>முதலில், தீயினால் சுடுதலும் நாவினால் சுடுதலும் ஒப்புமை தோன்றக் கூறப்பட்டன. பின்னர்த் தீயினால் சுட்டது புண் என்றும், நாவினால் சுட்டது வடு என்றும் வேறுபடுத்திக் கூறப்பட்டமையால் இது வேற்றுமையணி ஆகும். | 2<br><br>1<br><br>1 | **4** |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | (அல்லது)<br>**உருவக அணி**<br>**அணி இலக்கணம்:**<br>உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடியின்றி உவமையினையே பொருளாகக் கூறுவது உருவக அணி எனப்படும். இதில் உவமேயப் பொருள் முன்னும் உவமைப் பொருள் பின்னும் அமையும்.<br>**சான்று:**<br>இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்<br>பார்தாக்கப் பக்கு விடும்.<br>**சான்று விளக்கம்:**<br>வறுமைக்கடலைக் கடக்க ஒருவன் கைக்கொண்ட இரத்தலாகிய காவல் இல்லாத படகு, அதன்கண் செல்லும்போது கரத்தல் என்னும் பாறை தாக்குமாயின் பிளந்துவிடும் என்பதாகும்.<br>**அணிப் பொருத்தம்:**<br>இக்குறளில் இரத்தலைப் படகாகவும், கரத்தலைப் பாறையாகவும் உருவகப்படுத்திக் கூறியதால் இ∴து உருவக அணியாகும். | 2<br><br>1<br><br>1 | **4** |
| 40 | **மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக் குறிப்பு ஒன்று எழுதுக.**<br>கடிதம்<br>தன்விவரக் குறிப்பு<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2<br>2 | **4** |
| 41 | **அன்னை (அல்லது) சுற்றுச்சூழல்** ஏதேனும் ஒரு தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை எழுதுக.<br>**(பொருத்தமான நயங்களுடன் மரபுக்கவிதை அல்லது புதுகவிதை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | **4** |
| 42 | **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**<br>**1.** எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் **வளை**<br>**2.** அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் **கம்பு**<br>**3.** அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான் **மதி**<br>**4.** பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே **இதழ்** | 1<br>1<br>1<br>1 | **4** |
| 43 | **தமிழாக்கம் தருக.**<br>1. உலகில் பார்க்க விரும்பும் மாற்றமாக நீங்கள் இருக்க வேண்டும்.<br>2. என்னுடைய அனுமதியின்றி யாரும் என்னைத் துன்புறுத்த முடியாது.<br>3. பலவீனமானது ஒருபோதும் மன்னிக்க முடியாதது. மன்னித்தல் ஓர் உறுதியான குணம்.<br>4. கண்மூடித்தனமாக உலகம் முழுவதையும் ஒரு கண் கொண்டு பார்த்தால் கண்ணாய்த் தெரிகிறது. | 1<br>1<br>1<br>1 | **4** |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| 43 | **காது கேளாதவர்களுக்கான மாற்று வினா:**<br>**வினாக்கள்:**<br>**1.** இனிமை, பண்பாடு, அகப்பொருள்<br>**2.** அதூஉம் - இசைநிறை அளபெடை<br>தழீஇய – சொல்லிசை அளபெடை<br>**3.** இனிமையும், நீர்மையும் தமிழெனல்<br>**(பொருத்தமான விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)**<br>**4.** தமிழ்மாலை | <br><br>1<br>1<br><br>1<br><br><br>1 | **4** |
| | **பகுதி -IV** | | |
| | **குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** | | **3x6=18** |
| 44 | **தலைவியின் இல்லறப்பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன:**<br>**முன்னுரை:**<br>வளமையும், வறுமையும் வாழ்க்கையென்னும் நாணயத்தின் இரு பக்கங்களாகும். வறுமையில் செம்மையாய் வாழ அறிவுறுத்துவது கல்வி. இம்மாண்பு சிலருக்கு இயல்பிலேயே கைகூடும். வளமான மனையில் பிறந்த பெண்ணொருத்தி, குறைந்த வளமுடைய தலைவன் வீட்டிலும் தன்னிலை மாறாது வறுமையிற் செம்மையாய் வாழ்கின்ற காட்சியைப் படம் பிடிக்கிறது. நற்றிணைப்பாடல்.<br>**தேனும் பாலும் கலந்த உணவு:**<br>"நம் மகள் சிறுமியாய் இருந்த பொழுது, செவிலித்தாயர், தம் ஒரு கையில், தேன் கலந்த வெண்மையான சுவைமிக்க இனிய பால் உணவை ஒளி வீசும் பொன்னால் செய்யப்பட்ட பாத்திரத்தில் இட்டு ஏந்திக்கொள்வர்; தம் மறுகையில், புடைப்பாகச் சுற்றப்பட்ட பூவை நுனியில் கொண்ட சிறிய கொம்பினைப் பிடித்துக்கொள்வர். அக்கொம்பை ஓங்கி, 'இப்பாலுணவை உண்பாயாக' எனக் கூறி அடிக்க முயல்வது போல் அச்சுறுத்துவர்.<br>**விளையாட்டுப் பெண்:**<br>மெல்லிய நரைத்த கூந்தலைக் கொண்ட முதிய அச்செவிலித்தாயர் பற்ற முடியாமல் தளர்ச்சியுற்றுத் தம் முயற்சியினைக் கைவிட்டுவிடுவர். மகளோ, தெளிவான ஒளியைக் கொண்ட முத்துப்பரல்களைக் கொண்ட சிலம்புகள் ஒலிக்க, முற்றத்தில் உள்ள பந்தரின் கீழ்த் தாவி ஓடி, 'உண்ணேன்' என மறுத்துரைக்கும் சிறிய விளையாட்டைக் கொண்டவளாய் இருந்தாள்.<br>**வறுமையிலும் செம்மைகாணும் வளமான காட்சி:**<br>இப்பொழுது அவள், தன்னை மணந்தகொண்ட கணவனது குடும்பம் வறுமை வாய்ப்பட்டு வருந்தும் நிலையிலும், தன் தந்தையின் செல்வச்சிறப்புடன் கூடிய வளமான உணவை நினைக்கவில்லை. ஓடும் நீருக்கு இடையே ஆங்காங்கு இடையீடுற்று மெல்லிய கருமணல் | <br><br><br><br><br><br><br><br><br>2<br><br><br><br><br><br><br><br><br><br><br><br>2<br><br><br><br><br><br><br><br>2 | **6** |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படும். அதுபோல, ஒருவேளை விட்டு ஒருவேளை உண்ணும் மனவலிமை உடையவளாய் இருக்கின்றாளே! இத்தகைய அறிவையும் ஒழுக்கத்தையும் இவள் எப்படி அறிந்துகொண்டாளோ?" என்று இரக்கமும் வியப்பும் கொண்டு கூறினாள் செவிலித்தாய்.<br>**முடிவுரை:**<br>வறுமையிற் செம்மையாய் வாழ்கின்ற மக்கள் அன்று மட்டுமல்ல. இன்றளவும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். | | |
| | **(அல்லது)**<br>**இறைவனின் பெருமையைத் தெரிவிக்கும் திருச்சாழல் மூலம் மாணிக்கவாசகரின் மொழி விளையாட்டு:**<br>**பெண் 1** : சுடுகாட்டைக் கோயிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்ட உங்கள் தலைவனுக்குத் தாயும் தந்தையும் இல்லை. இத்தன்மையனோ உங்கள் கடவுள்?<br>**பெண் 2** : எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லாவிடினும் அவன் சினந்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும்.<br>**பெண் 1** : அக்காலத்தில் பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சை, சிவன் உண்டான். அதற்குக் காரணம் யாதோ?<br>**பெண் 2** : அந்த நஞ்சை இறைவன் உண்டிருக்காவிட்டால் பிரமன், விஷ்ணு உள்ளிட்ட தேவர்கள் அன்றே அழிந்து ஒழிந்திருப்பார்கள்.<br>**பெண் 1** : தான் முடிவு இல்லாதவனாக இருந்தும் அவனை அடைந்த என்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்தானே இது என்ன புதுமை?<br>**பெண் 2** : உன்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும். | 2<br>2<br>2 | **6** |
| 45 | **சுந்தரராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.**<br>**முன்னுரை:**<br>அரசியல் சிந்தனையிலும், பொதுவுடைமைச் சிந்தனையிலும் கூர்வாளாய் மெருகேற்றிக்கொண்ட ஜீவா சமூக நலனுக்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்த ஜீவா பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br>**ஜீவா மேடையில் வாழ்ந்த மனிதர்:**<br>❖ ஜீவாவின் மரணச்செய்தியை நண்பர்களிடம் சொன்னபோது, 'பேசிக்கொண்டிருக்கும் போது இறந்தாரா? என்று கேட்கிறார்கள். அஃதாவது, நண்பர்களின் மனத்தில் ஜீவா எப்போதும் மேடையில் பேசிக் கொண்டிருக்கும் தோற்றமே நிறைந்திருக்கிறது. | 1 | **6** |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | **ஜீவா எனும் சங்கநாதம் மறைதல்:**<br>❖ தமிழகத்தின் கலை இலக்கிய அரசியல் மேடைகளில் முழங்கிய ஜீவாவின் மறைவு, ஒரு பேரோசையின் மறைவாகத்தான் உணரப்படுகிறது. எனவேதான், அப்பேரோசை காற்றில் கலந்தது என்று சுந்தரராமசாமி எழுதுகிறார். | 1 | |
| | **ஜீவாவின் பேச்சு நடை:**<br>❖ பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.<br>❖ அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகுநூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.<br>❖ அவருடைய பாணி இரவல்பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.<br>❖ நம் நாட்டு மக்களின் தரத்தையும், அனுபல அறிவையும், பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அது.<br>❖ விசயத்தை வண்டி வண்டியாகக் குவித்துப் சின்ன மூளைகளைக் குழப்பி வாதனைக்கு உள்ளாக்குவது பல பிரசிங்கிகளுக்குப் பொழுதுபோக்கு. ஜீவா இதற்கு எதிரி. ஒரு கைப்பிடி விசயத்தை விரிவாகச் சொல்லிப் புரியவைத்துவிட்டால் போதும் என்பதே அவருடைய எண்ணம்.<br>❖ பேச்சு பயனைத் தரவேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும். | 2<br><br>1 | |
| | **பாமர மைந்தன்:**<br>❖ ஜீவா தாம் ஏற்றுக்கொண்ட தத்துவத்தை, சித்தாந்தக் கருத்துகளை மேடையில் கலைநயத்துடன் முழங்கியவர். மனித குலத்தை முன்னேற்றுவதற்காகத் தயக்கமில்லாமல் பட்டிதொட்டிகளிளெல்லாம் பேசினார். இளைஞர்களைப் பார்த்து என்னைப் பயன்படுத்திக் கொள். முடிந்தமட்டும் என்னைப் பயன்படுத்திக் கொள்வதே நீ எனக்குத் தரும் மைம்மாறு என்பது ஜீவாவின் பிரார்த்தனை. | ½ | |
| | **மேடையிலே வாழ்ந்த மேதை:**<br>❖ ஜீவா, ஆயிரக்கணக்கான மக்களின் முன் தம் பேச்சின்மூலம் சிங்கத்தைப் போலக் கர்ஜனை செய்தவர்; சங்கநாதம் முழங்கியவர்; மேடையிலேயே வாழ்ந்தவர். | ½ | |
| | **காற்றில் கலந்த பேரோசை:**<br>❖ பேச்சின் வடிவமாய் வாழ்ந்த ஜீவா பேரோசையாகக் கருதத்தக்கவர். அத்தகையவரின் எதிர்பாராத மரணம், எழுத்தாளர் சுந்தரராமசாமிக்குப் பேரோசை ஒன்று | | |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | எழும்பித் தேய்ந்தது போலவே தோன்றுகிறது. பேச்சுக்கலை அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது. இப்போது மேடையில் ஒரு நாற்காலி காலியாகிவிட்டது. அது என்றும் காலியாகவே கிடக்கும்.<br>**முடிவுரை:**<br>**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**<br>**தோன்றலின் தோன்றாமை நன்று.**<br>என்ற வள்ளுவ நெறிப்படி புகழொடு வாழ்ந்து காற்றில் பேரோசையாய் மறைந்த ஜீவா பற்றி தகவல்களை இக்கட்டுரைவழி அறியமுடிகிறது. | | |
| | **(அல்லது)** | | |
| | **மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியும், எழுத்து மொழியும்:**<br>**முன்னுரை:**<br>கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை இயன்றவரை பேசுவது போல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதி. கவிதை எவ்வாறு நிகழ்கிறது; எழுத்து மொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதைப் பற்றிக் காண்போம்.<br>**பேச்சுமொழி:**<br>❖ எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.<br>❖ எனவேதான் இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.<br>❖ எழுத்துமொழி அப்படியன்று. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது.<br>❖ முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.<br>❖ அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.<br>❖ பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச்செய்கின்றன. இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர். இதையே நேரடி மொழி எனக் கருதுகின்றனர்.<br>❖ நேரடி மொழி எனப்படும் பேச்சு மொழிக்கு ஒரு போதும் | 3 | **6** |

| | | | |
|---|---|---|---|
| | பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடன் இருக்கிறது. மாறிக்கொண்டே இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா இல்லை இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா. பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல்தோல் போல் இயங்குகிறது.<br>❖ பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உண்டு. முதல் வகையினர் வால்ட்விட்மனைப் போன்றவர்கள். கவிஞர் மல்லார்மே போன்றவர்கள் இரண்டாம் வகையினர், மூன்றாம் வகையினர் ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய பாப்லோ நெரூடா போன்றவர்கள்.<br>**எழுத்துமொழி:**<br>❖ ஒரு திரவ நிலையில்தான் விரும்பும் வகையில் தன்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது.<br>❖ எழுத்துமொழி எழுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது.<br>❖ எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது.<br>❖ எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத் தானே பேசிக் கொள்கிற பேச்சு.<br>❖ பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல்தோல் போல் இயங்கும். ஆனால் எழுத்து மொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன.<br>**முடிவுரை:**<br>பேச்சுமொழியாயினும், எழுத்து மொழியாயினும், மொழி என்ற ஒன்று என்னுள் வந்தபின்தான் உலகம் எனது கவனிப்பிற்குரிய ஒன்றாக மாறியது. எனது உலகத்தை இழையிழையாகப் பிரித்தும், வகுத்தும், தொகுத்தும் கொடுத்தது என்பதை உணர்ந்தோம். | 3 | |
| 46 | **வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக**<br>**முன்னுரை:**<br>வாடிவாசல் அது துள்ளி ஓடும் காளை மாடுகளின் வாசல். பழங்கால வீரவிளையாட்டான ஏறுதழுவுதலின் போது அதில் கலந்து கொள்ளும் காளைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்துவிடும் இடம் தான் வாடிவாசல். அக்காளைகளின் மூக்கணாங்கயிறு மற்றும் காளையை இணைக்கும் கயிறு இவற்றையெல்லாம் அகற்றிவிட்ட | ½ | |

| | | | |
|---|---|---|---|
| | பிறகுதான் போட்டிக்கு விடுவர். வாடிவாசல் என்ற பெயரில் சி.சு.செல்லப்பா அவர்கள் எழுதியுள்ள நாவலைப் பற்றிக் காண்போம். | | |
| | **மங்கையரின் வீரவுணர்வு!:**<br>வீரத்தின் விளைநிலம் தமிழகம். போர்முரசம் கேட்டவுடன், கலங்காது கையில் வேல் எடுத்துக் கொடுத்து, 'நெற்றியில் திலகமிட்டு, போரிடச் சென்று வெற்றியுடன் வருக! என வழியனுப்பி வைக்கும் மங்கையரைக் கொண்ட நாடு. | 1 | |
| | **காளைகளை அடக்கும் காளைகள்!.**<br>இத்தகைய வீரமக்கள் இன்றும் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். தின்று கொழுத்துத் தினவெடுத்து வளர்ந்திருக்கும் காளைகளை எதிர்த்து நின்றால், அக்காளைகளின் கூரிய கொம்புகளால் குத்துப்பட்டுக் சாக நேரிடும் அல்லது பெருங்காயம் உற்று விழ நேரிடும் என்பதை எல்லோரும் அறிவர். எனினும் அதனைப் புறந்தள்ளி, போராடி காளைகளை அடக்கி வெற்றி பெறப் பல நூறு வீர இளைஞர்கள் ஜல்லிக்கட்டு நிகழும்போது முன் வருவதைக் காணும் போது வியப்பு மேலிடுகிறது. | 1 | **6** |
| | **காளையன்று, கருப்புப் பிசாசு!:**<br>மேற்குறித்த வீரமரபில் வந்தவன்தான், 'வாடிவாசல்' கதையில் இடம் பெறும், பிச்சி. அவன் ஜல்லிக்கட்டுப்போட்டியில் கலந்துகொண்டான். அடுத்தடுத்து ஒவ்வொரு காளையையும் அவிழ்த்துவிட்டனர். அவை துள்ளியும் குதித்தும் கொம்புகளைஅசைத்துக்கொண்டும் எவரேனும் நெருங்கினால் அவ்வளவுதான்' என்று கூறுவது போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டும் வந்தன. அப்படி வந்த காளைகளுள் ஒன்றுதான் வாடிபுரத்துக்காளை. அது காளையன்று, கருப்புப்பிசாசு!. ஆம்: உடல் வளத்தாலும் நிறத்தாலும் அஃது அப்படித் தோன்றியது. அதனைக் கண்டு பலரும் பின்வாங்கினர். ஆனால், பிச்சி உரத்தோடு அதன் முன்பு நின்றான். | 1 | |
| | **தந்தையைக் கொன்ற காளை!:**<br>அதனைக் கொண்டு அங்கிருந்தோர் அனைவரும் அச்சத்தில் உறைந்து நின்றனர். 'பிச்சிக்கு இன்று சாவு நிச்சயந்தான்!' என்றே முடிவு கட்டினர். ஆனால் பிச்சி அதன் கொம்புக்கு நேர் எதிர்நின்றான் . 'அப்பன் ஆசைக்கு மட்டுமன்றி உயிருக்கே உலைவைத்த காரி. அதன் கொம்பில் இன்னும் அப்பன் இரத்தம் வழிந்துகொண்டிருப்பது போன்ற பிரமை அவனுக்கு ஏற்பட்டது". என்கிறார். கதையாசிரியர். | 1 | |
| | **காளையை அடக்கினான்; களங்கம் துடைத்தான்!:**<br>ஆம், கடந்த ஜல்லிக்கட்டின் போது அக்காரியை அடக்கப் பிச்சிக்கு அப்பன் முயற்சி செய்தார்: ஆனால் , | | |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | அக்காளையால் குத்தப்பட்டு இறந்தார். அதற்குப் பழி வாங்கவே பிச்சி அக்காளையை இப்போது எதிர்த்து நின்றான். தன் தந்தையைக் கொன்ற காளையைக் கொல்வதற்காக அன்று: தன் தந்தையைக் கொன்ற காளையினை அடக்கித் தன் வீரப்பரம்பரைக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க.<br>அவ்வாறே அக்காளையோடு மும்முறை மோதி , அதனை வீழ்த்தித் தரையில் சாயச்செய்தான். களங்கம் கரைந்தது, வீரம் நிலைத்தது!<br>**முடிவுரை:**<br>ஜல்லிக்கட்டு என்பது மனிதனுக்கும் காளைக்கும் நடைபெறும் ஒரு உன்னதமான விளையாட்டு. இரண்டு காளைகளின் இடையே நடைபெறும் மகிழ்ச்சியான உத்வேகத்தை அளிக்கக்கூடிய ஒரு விளையாட்டு. தங்களின் வீரத்தைக் காட்டும் ஒரு விளையாட்டு விழாவாகும். | 1<br><br><br><br><br><br><br><br><br><br><br><br>½ | |
| | **(அல்லது)**<br>**சிம்பொனித் தமிழர் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகள்:**<br>தாய் பாடும் தாலாட்டில் தொடங்கி, தமிழ்நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும் அசைபோட்டு வளர்ந்த தமிழகத்தின் பெருமைக்குரிய இசைமேதை சிம்பொனித் தமிழர் ஆவார். இவர் இசைஞானி என்றும் ராகதேவன் என்றும் கொண்டாடப்படுகின்ற இளையராஜா ஆவார்.<br>**இசைச் சங்கமம் :**<br>பழந்தமிழ் இசையையும் உழைக்கும் மக்களின் துள்ளல் இசையையும் கலந்து மக்கள் மனத்தை மயக்கும் வகையில் கலந்து கொடுத்தவர், இளையராஜா. பொதுமக்கள் நுகரும் திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்; இளையராஜா கர்நாடக இசையின் பல இராகங்களைத் திரையிசையில் அறிமுகப்படுத்தினார். அதனால் திரைமெல்லிசை புதிய உயரங்களைத் தொட்டது.<br>**இசைக்கொடை :**<br>அன்னக்கிளி படத்தில் அறிமுகமான இளையராஜாவின் இசையோட்டம் தமிழர் வாழ்ந்த திசைகளில் எல்லாம் தென்றலாய் நுழைந்து புதிய வாசல்களைத் திறந்தது. புதுப்புது மெட்டுகள் இளையராஜாவிடமிருந்து தமிழ்ச் சமூகத்திற்குக் கொடையாகக் கிடைத்தன.<br>**நாட்டுப்புற இசை:**<br>நாட்டுப்புற இசையில் செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டவர். நாட்டுப்புறப்பாடலுக்கு கர்நாடக இசைவடிவம் கொடுத்தார். | 3 | **6** |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | **அனுபவம் இனிது :**<br>இந்தியாவில் முதன் முதலில் சிம்பொனி இசைக்கோவையை 13 நாட்களில் உருவாக்கியவர். மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம், வலி போன்ற மனித உணர்வுகளுக்கும் இசைவடிவம் கொடுக்க முடியும் என்பதை “ இந்தியா 24 மணி நேரம் என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.<br>**இசைத்தொகுப்பு :**<br>மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடலுக்கு ஆரடோரியோ இசை வடிவம் தந்தார். இராஜாவின் ரமணமாலை, இளையாராஜாவின் கீதாஞ்சலி எனும் தமிழ் இசைத்தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்ற பக்திப் பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி ராகத்தை உருவாக்கினார்.<br>**ஆஸ்கர் தமிழர் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகள்:**<br>**ஆஸ்கர் தமிழர் என்று புகழப்படுபவர் இசைப்புயல் என்றும், ஆசியாவின் மொசார்ட் என்றும் பாராட்டப்படும் ஏ.ஆர். இரஹ்மான் ஆவார்.**<br>**புதிய எழுச்சி :** 1992 ஆம் ஆண்டில் ரோஜா திரைப்படத்தின் இசையமைப்பாளராய்த் தமது பணிகளைத் தொடங்கினார், ஏ.ஆர். இரஹ்மான். இவரது இசை, தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சி ஏற்படுத்தியது. தமது முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற பெருமையையும் ஏ.ஆர். இரஹ்மான் பெற்றார்.<br>**இளையோர் இசையாளுமை :** தமது துள்ளல் இசைப்பாடல்கள், புதிய இசை ஆக்கங்களால் இந்திய இளைஞர்களின் மனதைத் கொள்ளை கொண்டார், ஏ.ஆர். இரஹ்மான்.<br>**துள்ளல் இசை நாயகன் :** தமிழ் யாப்பிலக்கணத்தின் நால்வகைப் பாக்களில் கலிப்பாவின் ஓசை துள்ளல் ஓசையாகும். கொண்டாட்ட மனநிலையின் வெளிப்பாடாக இருக்கும் இந்த துள்ளல் இசைச்சாயல் தமிழ்மக்களின் வாழ்வில் எங்கும் நிறைந்திருப்பது. அதனை நுட்பமாக உணர்ந்த ஏ.ஆர். இரஹ்மான் தம் இசைக்கோவையில் அதனை உயிர்ப்புடன் கொண்டுவந்தார். அதன் வழியாய்த் தமிழ் இளைஞர்களை ஆடவும் பாடவும் வைத்தார்.<br>**கனவை இசையாக மொழிபெயர்த்தவர் :** உலகெங்கும் பரவிய தமிழ் இளைஞர்களைத் தம் இசையால் இணைத்தார், ஏ.ஆர். இரஹ்மான். பல நாடுகளைச் சேர்ந்த இசை, பண்பாட்டுக் குறியீடுகளைத் தம்முடைய இசையிலே தவழவிட்டார் அவர். இணை வழியில் உலவும் இளைஞர்களின் கனவை இசையாக மொழிபெயர்த்தார்.<br>**கணினி இசைமேதை :** நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய | 3 | |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | உலகளாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத்தரத்தில் இசையமைத்தார் ஏ.ஆர். இரஹ்மான். புதிய பாடகர்கள் பலரை அறிமுகம் செய்தார்.<br>இவ்வாறு சிம்பொனித் தமிழர் இளையராஜாவும், ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர். இரஹ்மானும் தமிழிசைக்கு வளம் சேர்த்ததோடு மட்டுமல்லாமல், தமிழர்களின் இசை வரலாற்றில் மாபெரும் அடையாளங்களாய் நிலைத்து நிற்கின்றனர். | | |
| | **பகுதி - V** | | |
| | **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** | | **4+2 = 6** |
| 47 | **தொலைந்து போனவர்கள்**<br>**'நான்' என்பாய் அது** நீயில்லை – வெறும்<br>நாடக வசனம் பேசுகிறாய்<br>ஏன்? என்பாய் இது கேள்வியில்லை – அந்த<br>ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.<br>- **அப்துல் ரகுமான்**<br>**பா வகை: சிந்து**<br>**திருக்குறள்**<br>வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்<br>துணைவலியும் தூக்கிச் **செயல்.**<br>**(அல்லது)**<br>நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்<br>வாய்நாடி வாய்ப்பச் **செயல்**<br>**(ஏதேனும் ஒரு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4<br>2 | 6 |

# மதிப்பெண் பகுப்பாய்வு

| மதிப்பெண் | மொத்த வினாக்கள் | புத்தக வினாக்கள் | அகவய வினாக்கள் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1 மதிப்பெண் வினாக்கள் | 14 | 6 | 8 | 14 |
| 2 மதிப்பெண் வினாக்கள் | 16 | 13 | 3 | 32 |
| 4 மதிப்பெண் வினாக்கள் | 13 | 10 | 3 | 52 |
| 6 மதிப்பெண் வினாக்கள் | 6 | 5 | 1 | 36 |
| மனப்பாடப்பாடல் | **4+2** | **4+2** | - | 6 |
| மொத்த மதிப்பெண்கள் | **140** | 108 | 32 | 140 |
| சதவீதம் | | **77%** | **23%** | 100% |